Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 157

செவ்வாய்க்கிழமை 02 மே 2023

சித்திரை 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்த ஆண்டில் உடன்பாடு


## மே தின உரையில் ரணில் தெரிவிப்பு

## நெருங்கி வருமாறு தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு

கொழும்பு, மே 2

நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான உடன்பாடு இந்த ஆண்டு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமாயின், தயவுசெய்து இந்தப் பொறிமுறைக்குள் வந்து விசேடமாக நாடாளுமன்றத்தில் ஓர் அரசாக நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம் – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

»11



## வடக்கில் எழுச்சியுடன் நடந்த தொழிலாளர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 2

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று நாடு முழுவதும் தொழிலாளர் தினக் கூட்டங்கள் நடத்தப்பட்ட நிலையில், வடக்கிலும் தொழிலாளர் தினக் கூட்டங்கள், ஊர்திப் பவனிகள் முன்னெடுக்கப்பட்டன.

»11



## போராட்டம் நடத்தி பயனேதும் இல்லை

### மே தினக் கூட்டத்தில் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மே 2

ஜனநாயகம் அல்லாத வழியில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகளெல்லாம் தோல்வியிலேயே முடியும். ஆட்சியை பொறுப்பேற்க அழைப்பு விடுத்தபோது பின்வாங்கிவிட்டு, தற்போது விமர்சனங்களை முன்வைப்பது பயனற்றது.

-இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச

»11

## சட்டங்களை நீக்காவிடில் போராட்டங்கள் தொடரும்

### அரசாங்கத்துக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, மே 2

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் என்பவற்றை முற்றாக நீக்கத் தவறும் பட்சத்தில் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்று அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள்,

»11

## எரிவாயு விலையும் விரைவில் குறையும்

கொழும்பு, மே 2

எரிவாயு சிலிண்டர் விலை இன்னும் சில தினங்களில் குறையும் என்று

»12

## தப்பித்துச் செல்ல முயன்ற டிப்பரை சூடு நடத்திப் பிடித்த அதிரடிப்படை!



### வடமராட்சியில் பரபரப்பு

யாழ்ப்பாணம், மே 2

சிறப்பு அதிரடிப் படையினரின் சமிக்ஞையை மீறித் தப்பிச் செல்ல முயன்ற டிப்பர் வாகனம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கைப்பற்றப்பட்டது. அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வடமராட்சி கிழக்கு,

»12

## குடியேற்றங்களால் கன்னியாய் கபளீகரம்!

### அவசர உதவி கோருகிறது ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

திருகோணமலை, மே 2

கன்னியாயில் சட்டவிரோத முஸ்லிம் குடியேற்றம் தமிழர் காணிகளில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வெந்நீரூற்றுச் சுற்றயலில் அவசர அவசரமாகச் சட்டவிரோதமாக

»11



## அல்லைப்பிட்டியில் விபத்து; இரு இளம் பெண்கள் சாவு!



யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியில் நேற்று மாலை நடந்த விபத்தில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலையைப் பாதுகாப்பதற்கு படை வைத்திருக்கவேண்டும்

## மாவை. சேனாதிராசா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 2**

**சிலையை வைத்திருக்கிறீர்கள். அதனைப் பாதுகாப்பதற்கு ஒரு படையை வைத்திருக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

மருதங்கேணி மாசார் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மருத ஈசுவரர் ஆலயத்தில் பாலர் இறுவட்டு வெளியீட்டு விழாவில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

நீங்கள் இங்கு ஒரு சிலை வைத்திருக்கிறீர்கள். ஆனால் இந்தச் சிலையை பாதுகாக்க ஒரு படையையும் வைத்திருக்கவேண்டும்.

அண்மைக்காலமாக இந்துக்கள் ஆலயங்களில் வழிபடும்போது அடுத்தநாள் அந்தச் சிலை இருக்குமா என்று நினைத்துக் கொண்டே வழிபடுகிறார்கள்.

இந்த நாட்டினுடைய கலாசாரம் அவ்வாறே வளர்க்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ-இ)

# ஆஸிக்கு அனுப்புவதாக பெரும்தொகை மோசடி!

## ஆளும்கட்சி எம்.பி.யின் இணைப்பாளர் கைது

கொழும்பு, மே 2

அவுஸ்திரேலியாவுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்புவதாகக் கூறி பெருந்தொகை பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரின் ஒருங்கிணைப்புச் செயலாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மனுவர தெல்தெனிய பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணமோசடி தொடர்பில் பொதுமக்களிடமிருந்து பெருமளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் காரணமாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையின் பிரகாரம் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# திருமலையில் கோர விபத்து இரண்டு இளைஞர்கள் சாவு!

## மற்றொருவர் படுகாயம்.

திருகோணமலை, மே 2

திருகோணமலையில் இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹொரவ்பொத்தான, கெப்பித்திகொல்லாவ பிரதான வீதி கிவுளேகட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஹொரவ்பொத்தான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெப்பித்திகொல்லாவ பகுதியிலிருந்து கார் ஒன்று ஹொரவப்பொத்தான நோக்கி வந்து கொண்டிருந்தபோது வீதியிலிருந்த மாட்டுடன் மோதி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரில் பயணித்த மூவரில் ஒருவர் ஹொரவப்பொத்தான மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

மற்றைய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு ஒருவர் உயிரிழந்துள்ளார். (ஒ-22)

# சுனாமி கோபுரங்கள் 40 வீதமானவை செயலிழப்பு

கொழும்பு, மே 2

சுனாமி எச்சரிக்கைக் கோபுரங்களில் 40 வீதமானவை செயற்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

சுனாமி பற்றி எச்சரிப்பதற்காக 77 சுனாமி கோபுரங்கள் நாடு முழுவதும் இடர்முகாமைத்துவ அமைச்சால் நிறுவப்பட்டுள்ளன. இந்த சுனாமி கோபுரங்கள் தற்போது 15 வருடங்கள் பழமையானவை என இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கோபுரங்கள் பல இயங்கவில்லை என்றும், சுனாமி கோபுரங்களுடன் இணைக்கப்பட்ட செயற்கைக்கோள் அமைப்பும் செயற்படவில்லை என்றும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

வேலை செய்யாத சுனாமி கோபுரங்களை கையால் இயக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

சுனாமி அபாயம் ஏற்படும் போது சுனாமி கோபுரங்கள் மூலம் மட்டும் மக்களுக்குத் தகவல் தெரிவிக்க முடியாது - என்றார்.

இதன் காரணமாக கையடக்கத் தொலைபேசிகள், ஊடகங்கள், பிரதேசசெயலர்கள் அலுவலகங்கள், ஒலிபெருக்கிகள், வழிபாட்டுத் தலங்களில் உள்ள மணிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி சுனாமி எச்சரிக்கை அமைப்பு பின்பற்றப்படும் - என்றார். (ஒ-இ)

# காய்கறி நுகர்வு நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, மே 2

காய்கறி நுகர்வு சுமார் 40 சதவீதம் அதிகரித்துள்ளது. காய்கறிகளின் மொத்த விற்பனை விலை குறைந்துள்ளதாலும், சில்லறை சந்தையில் விலை உறுதிப்பாடாகவும் உள்ளதால் நுகர்வு அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்

சில வருடங்களுக்குப் பின்னர் மரக்கறிகளின் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் வர்த்தக சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்

பெறப்பட்ட அனைத்து மரக்கறிகளின் விலையும் ஒரு கிலோ இருநூறு ரூபாவை தாண்டவில்லை எனவும் நேற்றுமுன்தினம் சுமார் 7 இலட்சம் கிலோ மரக்கறிகள் கிடைத்துள்ளதாகவும் தம்புள்ள விசேட பொருளாதார வர்த்தக நிலையத்தின் தொழிற்சங்க செயலாளர் ஐ.ஜி. விஜயானந்தா தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# சேவைகளை ஆரம்பிக்க பாதுகாப்பை உறுதிசெய்க

## புத்தூர் மருந்தகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 2

மருத்துவமனையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மருத்துவமனை சேவைகளை ஆரம்பிக்க முடியும் என புத்தூர் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி இளைஞர் குழுவொன்று மருத்துவ பராமரிப்பு நிலையத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி, பணியாற்றிய மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்தது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாரால் மூவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தையடுத்து மருத்துவமனையின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தற்போது மருத்துவமனைக்கு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையிலுள்ள கண்காணிப்பு கமரா மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டால் அதனை மருத்துவ சங்கத்தினர் பரிசீலனை செய்து மருத்துவரை பணியாற்ற அனுமதிக்கமுடியும் என்று மருத்துவமனைச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

## சதொச ஊடாக அரசாங்கத்தால்

# பாவனைக்கு உதவாத ரின் மீன்கள் விற்பனை

சதொச விற்பனை நிலையங்களூடாக, மனித பாவனைக்கு உதவாத ரின் மீன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றும் இந்த மோசடி 2021ஆம் ஆண்டு இடம் பெற்றுள்ளது என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளரான துஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

துறைமுக அதிகாரசபையால் தடைசெய்யப்பட்ட ரின் மீன்களை விற்குமாறு 2021ஆம் ஆண்டு ஜூலையில் அரசுக்குச் சொந்தமான சதொச விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலை குணவர்த்தன வெளியிட்டார். அந்த மின்னஞ்சலில், 'இலங்கை துறைமுக அதிகார சபையால் தடைசெய்யப்பட்ட ரின் மீன்களை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருந்ததையும் துஷான் குணவர்த்தன மேற்கோள் காட்டியுள்ளார்.

நுகர்வோர் அதிகாரசபை இந்த விற்பனையை நிறுத்துவதற்கு பலகட்ட முயற்சிகளை மேற்கொண்டது. எனினும், அரசாங்கம் அந்த விற்பனையைத் தொடர விரும்பியது என்றும் துஷான் குணவர்த்தன தகவல் வெளியிட்டுள்ளார். (ம)

# தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், மே 2

ஆனைக்கோட்டையில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இருவரை சோதனையிட்ட பொழுது 23 வயதான இளைஞரிடமிருந்து 2 கிராம் 370 மில்லி கிராம் கஞ்சாவையும், 25 வயதான நபரொருவரிடமிருந்து 1 கிராம் 250 மில்லிகிராம் கஞ்சாவையும் கைப்பற்றினர்.

இருவருக்கும் எதிராகவும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து கடந்த 29ஆம் திகதி முற்படுத்திய நிலையில் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து எச்சரிக்கையுடன் நீதிமன்று விடுவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் ஊழியர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்

## வடக்கு தனியார் ஊழியர் சங்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 2**

**வடமாகாண தனியார் ஊழியர்களின் பிரச்சினைகள் உடன் தீர்க்கப்பட வேண்டும். அடுத்த ஆறு மாதங்களுக்குள் அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று வடமாகாண தனியார் ஊழியர் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண தனியார் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலிருந்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் வரை நேற்று வாகனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாண தனியார் ஊழியர்கள் தொடர்பான பதிவுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பலம் எம்மிடம் தற்பொழுது உள்ளது. வர்த்தக சங்கத்துடன் இணைந்து செயலாற்றத் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் எதிர்வரும் வாரமளவில் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஊழியர்களின் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படும் - என்றார். (ம)

## மன்னார் ஆலயங்களில் மே தின வழிபாடுகள்!

மன்னார் மாவட்டத்தில் நேற்றையதினம் பல தேவாலயங்களில் மே தினத்தை முன்னிட்டு தொழிலாளர்களின் நலனுக்காக சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபை, தச்சுத் தொழிலாளரும் இயேசுக் கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையுமான புனித சூசையப்பருக்கு உழைப்பாளர் தினமான மே மாதம் முதலாம் திகதியன்று விழாவெடுக்கின்றது.

இதைமுன்னிட்டே மன்னார் ஆலயங்களில் நேற்று சிறப்புத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. அத்துடன், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இடையே விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. (ம-60)




## வவுனியாவில் நேற்று மேதின ஊர்வலம்!

புதிய ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் பிரதான மேதினக்கூட்டமும், ஊர்வலமும் வவுனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்றன.

வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் கடை வீதி வழியாக மருத்துவமனைச் சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா மாநகரசபை மண்டபத்தை அடைந்தது.

அங்கு மேதினக்கூட்டம் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.பகிதரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜனஅமைப்பின் இணைத் தலைவர் பூ.சந்திரபத்மன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக கே.ஜிந்திசன், தொழிற்சங்கம் சார்பாக க.மகேந்திரன், பெண் விடுதலைச்சிந்தனை அமைப்பின் சார்பில் சிவந்தினி ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். (ம-110)

மே தினத்தை முன்னிட்டு



## யாழ்ப்பாணத்தில் வாகனப் பேரணி!

யாழ்ப்பாணம், மே 2

வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் வாகனப் பேரணியொன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலிருந்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் வரையில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. (ம)

### மே தினத்தை முன்னிட்டு

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுப் போர்

கிளிநொச்சி, மே 2

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மே தினத்தை முன்னிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படங்களைத் தாங்கியவாறும், தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வலியுறுத்தியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கு சர்வதேச விசாரணையே வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். (ம-113)







**சும்மா கிடந்த றோட்டை கிளறிக்கெடுக்கிறதை எங்கையாவது பார்த்திருக்கிறியளோ? யாழ்ப்பாணத்தில இருந்து காரைநகருக்குப் போனியள் என்டால் இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காணலாம். கனகாலமா 'இந்த றோட்டைப் போடுங்கோ' எண்டு சனம் போகாத இடமில்லை; குடுக்காத மனுவில்லை. குச்சொழுங்கையளுக்கு கூட காப்பெற் போட்டவைக்கு எக்கச்சக்கம் சனம் பாவிக்கிற, இந்தப் பெரிய றோட்டு கண்ணுக்குத் தெரியாமல் இருந்தது அதிசயமெல்லோ. உண்மையில இது யானைக்கட்சியில இருந்த அக்காவின்ர ஈகோவும், அவாவுக்கு எதிரா வேலை செய்த மற்றக் கட்சி எம்.பி.மாரின்ர விளையாட்டுகளாலையும் தான் கைக்கெட்டின காப்பெற் இப்பிடி கடும் கிளறலோட போகக் காரணம்.**

**எல்லா அரசியல் விளையாட்டுகளும் ஓய்ஞ்சு, ஒருமாதிரி இந்த றோட்டை போடுற வேலையள் தொடங்க, இன்னொரு பிரச்சினை கிளம்பிச்சுது. வழக்கமா காப்பெற் போடுறதெண்டால் அந்த றோட்டில வாற மதகுகள் எல்லாம் பிரிச்சு, புதுசாப் போட்ட பிறகுதான் அதுக்குமேல கல்லெல்லாம் பரவி, காப்பெற் போடுறவை. ஆனால் இந்த றோட்டின்ர கெடுகாலமோ என்னவோ, 'இந்தா இடியிறன், பொறியிறன்' எண்டிருந்த மதகுகளைக் கூட திருத்தாமல் ஏதோ காப்பெற்றை மேல போட்டிட்டு போனால் கடமை முடிஞ்சுதெண்டமாதிரித்தான் வேலை நடக்கத் தொடங்கிச்சு. இதால சனம் கொந்தளிச்சு, றோட்டுக்கு இறங்கி போராடுற நிலைமைகூட வந்திட்டு. பிறகு ஒருமாதிரி 'சரி மதகு இருக்கிற இடங்களுக்கு காப்பெற் போடாமால் விட்டிட்டு, அதுகளைத் திருத்திப் போட்டு, பிறகு அதுக்கும் காப்பெற் போட்டுத்தாறம்' எண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபை தலையாட்டிச்சு. இப்பிடி மதகைத் திருத்தாமல் காப்பெற் போட்டதுக்கும் ஒரு கதை சொல்லிச்சினம். ஒப்பந்தகாரர் மதகைத் திருத்திறதெண்டு போடாமல் குடுத்த கொண்ட்ராக்டை மேலிடத்துக்காரர் கவனிக்காமல் ஓகே பண்ணினாதால இந்த நிலைமையாம்.**

**சரி, ஒருவழியா எல்லாச் சிக்கலும் தீர்ந்து, யாழ்ப்பாணத்தில இருந்து காரைநகர் மட்டும் இனி காப்பெற்றில வழுக்கிக் கொண்டு போகலாம் எண்ட நிலைமை வந்திச்சு. முழு றோட்டையும் கிளறி, கல்லுப்பரவி, காப்பெற்றும் போடத் தொடங்கியாச்சு. ஆற்றை கண் பட்டிச்சோ? டொலர் நெருக்கடி, பெற்றோல் பிரச்சினை எண்டு ஒவ்வொண்டா வந்து, நாட்டை மட்டுமல்ல இந்த றோட்டையும் அப்பிடியே கோமாவுக்கு கொண்டு போட்டுது. முந்தியெண்டாலும் இந்த றோட்டில பாயாசம் சாப்பிடுற அளவுக்குத்தான் பள்ளங்கள் இடைக்கிடை இருந்திச்சு. இப்ப குழம்பு, சொதி எண்டு தேவையான எதையும் எங்கை விட்டாலும் வழிஞ்சோடாமல் தேங்கி நிண்டு, சாப்பிடக்கூடியளவுக்கு எல்லா இடமும் பள்ளம் மட்டும்தான். 'ஏதோ தட்டுத்தடுமாறி வாகனங்களை உருட்டிக் கொண்டு போன றோட்டில இப்ப தவண்டு போக வைச்சிட்டாங்கள்' எண்டு சனம் ஒவ்வொரு நாளும் திட்டிடுதுகள். இப்ப டொலரெல்லாம் இறங்கி, நாடு இயல்புக்கு வந்துட்டு எண்டு பீத்துகினம். கொஞ்சம் காரைநகர் றோட்டையும் கண் திறந்து பார்த்தால் குறைஞ்சோ போடுவினம்?**



**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு: பெண்கள் உட்பட 8 பேர் காயம்

கொழும்பு, மே 2

கொழும்பு - துறைமுக நுழைவாயில் பகுதிக்கு அருகில் நேற்றிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 8 பேர் காயமடைந்து, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தின் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். புளூமெண்டல் தோட்டத்தைச் சேர்ந்தவர்களே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 4 பெண்களும் அடங்குகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தின் 6 ஆவது நுழைவாயிலுக்கு அருகில், துறைமுகத்துக்குச் சொந்தமான இரும்புகளை திருட வந்தனர் என்று கூறப்படும் இருவரை விசாரணை செய்தபோது, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் அங்கு வந்து அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளனர்.

அப்போது தனியார் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கியைப் பறிக்க சிலர் முயற்சித்த சந்தர்ப்பத்தில், மற்றுமொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

**கார்/வான் வாடகைக்கு**

கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்.

**077 89 89 691**

**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் (புதுக்கோவில்)**

நிர்வாகசபைத் தெரிவும், பரம்பரைக் குருக்கள் குடும்பத்தை பூஜைக்கு அமர்த்தும் முகமாக **பரிபாலன சபைப் பிரமாணம் பக்கம் 03, 8ஆம் பந்தியில்** கூறப்பட்டதுக்கமைவாக **விஷேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 08.05.2023 திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு** நடைபெறும் என்பதை சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**வே. பஞ்சலிங்கம்**
**தலைவர்.**

(CS/50277)AH-1)

**MAX LONG**
GUARANTEED BY JAPANESE STANDARD

கூரை தொடர்பான தீர்வுகளையும் ஹாட்வெயார் மற்றும் கட்டிடம் சார் மூலப்பொருட்களையும் வழங்கும் நிறுவனமொன்றுக்கு இளம் திறமையான பணியாளர்கள் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

**சந்தைப்படுத்தல் அதிகாரி**
யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ வவுனியா/ மன்னார்

**தகைமைகள்:**
- ஹாட்வெயார் துறையில் சிறந்த முன்னனுபவம்.
- ஹாட்வெயார் மற்றும் நம்பகத்தன்மை தொடர்பில் சிறந்த அனுபவம்.
- 45 வயதுக்குட்பட்ட சிறந்த தொடர்பாடல் உடையவர்.
- வட மாகாணத்தில் உள்ள, நிறுவனத்தின் தேவைக்கேற்ப எந்தவொரு இடத்திலும் பணியாற்றக்கூடியவராயிருத்தல். செல்லுபடியாகும் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம்.
- சம்பளம் ரூ.25000/- மற்றும் கமிஷன், எரிபொருள் கட்டணம் என்பன வழங்கப்படும்.
- க.பொ.த (சா/த) கற்றிருத்தல்.
- நிறுவன நற்பெயரை மேம்படுத்தக்கூடியவரும், அர்ப்பணிப்புடையவராயிருத்தல்.
- தமிழ் மொழியில் சிறந்த புலமைத்துவம் மற்றும் சிங்களம், ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

**விற்பனை பிரதிநிதிகள் (பயிலுனர்கள்)**

சந்தைப்படுத்தல் துறைக்கு பொருத்தமானவராக நீங்கள் காணப்படுவராயின். உங்களது சுயவிபரக்கோவைகளை அனுப்பி வைக்கவும். அண்மையில் பாடசாலை கல்வியை நிறைவு செய்தவர்களும் விரும்பத்தக்கது.

**பிரதேச விற்பனை பிரதிநிதிகள்**
யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ வவுனியா/ மன்னார்

**தகைமைகள்:**
- பிரதேச விற்பனை முகவராக சிறந்த முன்னனுபவம்.
- சந்தைப்படுத்தல் துறையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட முன்னனுபவம்.
- ஆவணங்களை தயாரிப்பதற்கும், குழுவாக செயற்படக்கூடியவருமாயிருத்தல்.
- நிறுவன இலக்குகளை அடைவதற்கு குழுவுக்கு பங்களிப்பளித்தல்.
- ஹாட்வெயார் மற்றும் நம்பகத்தன்மை தொடர்பில் சிறந்த அனுபவம்.
- 50 வயதுக்குட்பட்ட சிறந்த தொடர்பாடல் உடையவர்.
- வட மாகாணத்தில் உள்ள நிறுவனத்தின் தேவைக்கேற்ப எந்தவொரு இடத்திலும் பணியாற்றக்கூடியவராயிருத்தல்.
- செல்லுபடியாகும் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம்.
- சம்பளம் ரூ.35000/- மற்றும் கமிஷன், எரிபொருள் கட்டணம் என்பன வழங்கப்படும்.
- க.பொ.த (சா/த) தகைமைகள் மற்றும் கணினி பற்றிய அடிப்படை அறிவு
- நிறுவன நற்பெயரை மேம்படுத்தக்கூடியவரும், அர்ப்பணிப்புடையவராயிருத்தல்.
- தமிழ் மொழியில் சிறந்த புலமைத்துவம் மற்றும் சிங்களம், ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

**விண்ணப்பிக்கவும்:**
இல.281, திக்கல வீதி, கெலசல்வத்த, பாணந்துறை.
maxlongcv@gmail.com

**மேலதிக விபரங்களுக்கு:**
www.maxlongsteel.com
0383 383 070
0703 387 741
0703 387 723


**எங்கள் நெஞ்சை விட்டு அகலா**

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும்**
**41 ஆவது பிறந்த தின நினைவும்**

**அமரர் திரு. வீரப்பா மகிந்தன்**

**தோற்றம்** 02.05.1982 **மறைவு** 02.05.2020

**திதி: 30.04.2023**



அப்பா என்று அழைக்க
- அப்பா இல்லாது
ஆண்டுகள் செல்கிறதப்பா
- ஒவ்வொரு விநாடியும்
உங்கள் நினைவுகளுடனும்
உங்கள் எண்ணத் துடனும்
என்ன செய்வது ஏது செய்வது
என்று தெரியாது தினம் தினம்
- துடித்துக்கொண்டிருக்கும்
எம் இரு உயிர்களுக்கும்
- தெய்வமாக இருந்து
எமக்கு ஆசீர்வாதம் செய்வதோடு
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

**மனைவி, பிள்ளை.**

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 2

சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பொது அறையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி குருதிக் கொடை முகாம் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு குருதிக் கொடை முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-66)

## ஆலய வரலாறுகள் தொகுப்பு

மட்டுவில் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் வரலாறுகள் தொகுத்து ஆவணப்படுத்தப்படவுள்ளன. ஆலயம் சார்ந்த தர்மகர்த்தாக்கள் மற்றும் பரிபாலனசபையினர் தங்கள் ஆலயங்களின் வரலாறுகளை எதிர்வரும் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் 0778387412, 077 0710729என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-9)

## சங்காபிஷேகம்

மல்லாவி, மே 2

அனிஞ்சியன்குளம் அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய சங்காபிஷேகம் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-இ)

## ஆஞ்சநேயர் கோயிலில் யாகம்

யாழ்ப்பாணம், மே 2

மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயிலில் சுந்தர காண்ட மங்கல யாகம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 4 நாள்கள் நடைபெற்று 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு நிறைவடையவுள்ளது. (ஒ-இ)

## லங்கா ஐ.ஓ.சி.யும் விலைக் குறைப்பு

கொழும்பு, மே 2

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சிபெட்கோ) நேற்றுமுன்தினம் இரவு அறிவித்த விலைக்குறைப்புக்கு நிகரான வகையில் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் விலைக்குறைப்பை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் சுப்பர் டீசல் லீற்றர் 135 ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளது. அதன் புதிய விலை 330 ரூபாவாகும். ஒரு லீற்றர் டீசல் 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 310 ரூபாவாகும். ஒரு லீற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோல் 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 333 ரூபாவாகும். ஒரு லீற்றர் ஒக்டேன் 95 ரக பெற்றோல் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 365 ரூபாவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இன்சுலின் ஊசியைச் செலுத்தி மனைவியைக் கொல்ல முயற்சி

கொழும்பு, மே 2

இளம் மனைவிக்கு இன்சுலின் ஊசியைப் பலவந்தமாகச் செலுத்தி கொலைசெய்ய முயன்ற குற்றச்சாட்டில் மருத்துவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். திருகோணமலை பொதுமருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அளவுக்கதிகமான இன்சுலினால் மயக்கமடைந்த அந்தப் பெண் ஆபத்தான நிலையில், களுபோவில மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

திருமணமாகி சிலகாலம் கடந்த பின்னரும் குழந்தை இல்லாத காரணத்தால், இன்சுலின் ஊசியைச் செலுத்தி உடலில் சக்கரையின் அளவைக் குறைத்து அவரைக் கொல்வதற்கு மருத்துவர் முயற்சித்தமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## மாவாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 2

ஆனைக்கோட்டையில் மாவாப்பாக்குடன் கைதானவர் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 29 ஆம் திகதி ஆனைக்கோட்டையில் மாவாப்பாக்கை உடைமையில் வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் 1 பக்கெற் மாவா பாக்குடன் 26 வயதான அதே பகுதியைச் சேர்ந்த இளைஞரை சந்தேகநபராக கைது செய்தனர்.

சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து முற்படுத்திய நிலையில் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புதிய பயங்கரவாதிகளா?

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத் தாள்களைத் திருத்தும் பணிகளில் இருந்து விலகி, தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடும் ஆசிரியர்களை 'பயங்கர வாதிகள்' என்று அடையாளப்படுத்தியிருக்கின்றார் இரா ஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம. அவர்களின் தொழிற் சங்க நடவடிக்கை பயங்கரவாதச் செயற்பாடு என்றும் இவ்வாறானவர்கள்தான் பயங்கரவாத எதிர்ப்புச்சட் டத்தை எதிர்க்கின்றனர் என்றும் அவர் கோடிகாட்டியிருக் கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் என்பதைத்தாண்டி ஓர் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் திலும் அமுனு கமவின் கூற்று 'பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்' எத்தகைய வலிமையையும் அது எந்த நோக்கத்துக்காக அரசாங்கத் தால் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் காலக் கண்ணாடியாக நன்கு கட்டியம் செய்கின்றது.


பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உள்ள சட்ட ஏற்பாடு கள் ஜனநாயக விரோதத்தன்மைமிக்கன என்று தெரிவித் துத்தான் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் ஆபத்தான அம்சங்களைக் கொண்ட தாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமே காணப்படுகின்றது என்பதுதான் சட்ட வல்லுநர்களின் கருத்தாகவும் – எச்சரிக் கையாகவும் அமைந்துள்ளது. குறிப்பாக, அரசாங்கத்துக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கைகள், போராட்டங்கள் கூட 'பயங்கரவாதம்' என்ற சித்தாந்தத்துக்குக்கீழ் அணு கப்படலாம் என்பதுதான் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத் தின் ஆகப்பெரிய ஆபத்தம்சமாக உள்ளது என்றும் தெரி விக்கப்பட்டது. இது இவ்வாறிருக்கையில் திலும் அமுனு கம, ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை 'பயங்கரவாதச் செயற்பாடு' என்பதற்கொப்ப எடை போட்டு வெளிப்படுத்தியுள்ள கருத்தானது 'அரசாங்கத் தின் மனோநிலையை' தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

'புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் நாட்டுக்கு அவ சியம். தற்போது நாட்டில் பயங்கரவாதிகள் புதிதாக உரு வாகியுள்ளனர். அவர்கள் அரசாங்கத்திடம் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு விடைத்தாள்களைத் திருத்தாமல் உள் ளனர்' என்று அமுனுகம வெளியிட்டுள்ள கூற்றின் கனதித் தன்மை, உள்நோக்கம் மற்றும் அதன் பாரதூரம் என்பன உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் ஆழமாக உணரப்பட வேண்டும். 'அரசாங்கத்துக்கு எதிரான இந்தத் தொழிற் சங்க நடவடிக்கை ஒரு பயங்கரவாதச் செயற்பாடு. இவர் களை அடக்க வேண்டுமாயின் பயங்கரவாத எதிர்ப்புச்சட் டம் தேவை' என்ற கருத்தைத்தான் அவருடைய கூற்று வெள்ளிடை மலையாக வெளிப்படுத்தி நிற்கின்றது. ஓர் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் அமுனுகமவின் கூற்றினுடைய தாற்பரியத்தை உணர்ந்து அதற்குரிய தெளிவு படுத்தல்களை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வெளிப்படுத்தவேண்டும். பயங்கர வாத எதிர்ப்புச்சட்டம் அரச எதிர்ப்புப் போராட்டங் களையே இலக்குவைக்கின்றதா? என்ற கேள்விக்கான பதிலை – உத்தரவாதத்தை அழுத்தம் – திருத்தமாக மக் களுக்கு முன்வைக்கவேண்டிய பொறுப்பு இவர்களுக் குள்ளது.

இதேவேளை – இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத் துக்கான வரைவு சட்டவடிவம் பெற்றுவிடாமல் இருப்ப தற்குரிய, கணிசமான எதிர்ப்பைப் பதிவுசெய்ய வேண்டிய தார்மீகக் கடமை மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும், பொது அமைப்புக்களுக்கும் உள்ளது. தமிழர் தாயகமான வடக்கு–கிழக்கில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்துக்கு எதிராக அண்மையில் முன்னெடுக்கப்பட்ட பொதுமுடக் கத்தின் அவசியத்தன்மை தற்போது உணரப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பொதுமுடக்கங்களை தொடர்ச்சி யாக முன்னெடுப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக் கவே செய்கின்றன. ஆனால், வடிவங்கள் மாறியேனும் போராட்டங்கள் தொடரப்படவேண்டும். எவ்வள வுக்கெவ்வளவு பலமாக எதிர்ப்பு வெளிப்படுத்தப்படு கின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு எம் இருப்பை உறுதிசெய்யும். இந்தப் புரிதலை இது விடயத்தில் இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"உயிரே போகும் நிலை வந்தாலும் தைரியத்தை விடாதே! நீ சாதிக்கப் பிறந்தவன்! துணிந்து நில், எதையும் வெல்!"
– சுவாமி விவேகானந்தர்




## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு: கட்சிகளுடன் கலந்துரையாட முடிவு

**கொழும்பு, மே 2**



**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளுடனும் கலந்துரையாடத் தீர்மா னித்துள்ளதாக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.**

கடந்த வாரம் பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப் பிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆயினும் அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் உள் ளிட்ட பல்வேறு தரப்பின ராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சட்ட வரைவை சமர்ப்பிக்கும் நடவடிக்கையை பிற்போடுவ தாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சபையில் தெரிவித் திருந்தார்.

அடுத்த நடவடிக்கை தொடர் பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரி வித்ததாவது:

9 ஆம் திகதி நாடாளுமன் றம் கூடும்போது பயங்கர வாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பில் நாடாளுமன்றத் தைப் பிரதிநிதித்துவப்படுத் தும் சகல கட்சிகளுக்கும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். எமது தெளிவு படுத்தல்களின் பின்னர் எந்தவொரு கட்சியும் தத் தமது நிலைப்பாடுகளையும், திருத்தங்களையும் முன் வைக்க முடியும்.

அரசியல் கட்சிகள் மாத்தி ரமின்றி எந்தவொரு தரப் பினருடனும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவு தொடர் பில் பேச்சுக்களை முன்னெ டுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இது குறித்த நிலைப்பாடுகள் மற்றும் திருத்தங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன - என் றார்.

(ஒ-இ)

## முதல் காலாண்டில் வரி வருமானம் இலக்கைவிட 105% அதிகம் ஈட்டியது

கொழும்பு, மே 2

முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், தமது வரி வருமான இலக் கைத் தாண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித் துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் உள் நாட்டு இறைவரித் திணைக்களம் இலக்கு வருவாயை விட 105% அதிகமாக வருமா னம் ஈட்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச் சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித் துள்ளார்.

தேசிய நாளிதழில் முதல் காலாண்டில் எதிர் பார்த்த வருவாயில் 19% மட்டுமே ஈட்டப்பட் டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செய்தி முற்றிலும் தவறானது என்று அமைச் சர் கூறினார்.

மேலும், முதல் காலாண்டில் சுங்கத்துறை எதிர்பார்த்த வருவாயில் 89% ஈட்டியுள்ளதா கவும், மதுவரித் திணைக்களம் 64% வரு மானம் ஈட்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரி வித்தார்.

(ஒ-இ)

### நாளை

03.05.2023
புதன்கிழமை
சித்திரை 20

சுபநேரம் : 04.26- 05.56
ராகுகாலம் : 11.56 - 01.26

பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலிகளைச் சுமந்து வலிமையோடு...

**2006** மே 2. மாலை 7.05. இருளுக்குள் தன்னைப் போர்த்திக் கொண்டு உறங்குநிலைக்குச் சென்று கொண்டிருந்த யாழ். நகரத்தை
'சடசட' என எழுந்த வேட்டொலிகள் திடுக்கிட வைத்தன. என்னவென்று எட்டிப் பார்க்கவும் பயம். பேசாமல் வீட்டுக்குள் முடங்குவதே உயிருக்கு உத்தரவாதம் என்பதால் வேட்டொலியோடு எல்லோரும் அடங்கிப் போய்விட்டனர்.
வேட்டொலி கேட்ட இடம் 'உதயன்' அலுவலகத்தில்தான். போர் மேகங்கள் மீண்டும் கருக்கட்டத் தொடங்கியிருந்த அந்தக் காலத்தில் துணிந்து நின்று உண்மையைச் சொன்னவன் உதயன் மட்டும்தான். அது அதிகாரத்தின் உச்சாணிக் கொப்பில் நின்று ஆடுபவர்களுக்கு கொதிப்பை உண்டு பண்ணியது. எப்படியாயினும் உதயனின் குரல்வளையை அறுத்துவிட்டால் தாம் செய்யும் அட்டூழியங்கள் உலகின் காதுகளை எட்டுவதைத் தடுக்கமுடியும் என்று எண்ணியவர்கள் களத்தில் இறங்கினர்.
முகங்களை கறுப்புத் துணியால் இறுக் கட்டிய நால்வர் திடுதிடுப்பென துப்பாக்கி ஓசைகளோடு உதயனுக்குள் நுழைந்தனர். முகப்பில் ஆயுதமுனையில் பாதுகாப்பு உத்தியோகத்தரை ஒருவர் பணயமாகப் பிடித்து வைத்திருக்க ஏனைய மூவரும் ஆளுக்கொரு திசையில் சரமாரியாகச் சுட்டபடி முன்னேறினர். வந்தவர்களின் கண்களில் முதலில் சிக்கியவர் விற்பனை முகாமையாளர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்) கேட்டுக் கேள்வி எதுவும் இல்லாமல் தமது அறையில் அமர்ந்திருந்த அவர் மீது துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ச்சப்பட்டன. உதயனின் வளர்ச்சிக்காகத் துடிப்போடு இயங்கிவந்த இந்த இளைஞனின் இதயத் துடிப்பை கணநேரத்துக்குள் துப்பாக்கி ரவைகள் முடித்து வைத்தன.
ஆயுதத்தின் துணையோடு ஓர் ஊடகத்தைச் சிதைக்க வந்தவர்களின் கோரப் பசிக்கு முதல் இரையானார் சுரேஷ். ஆனாலும் ஆயுததாரிகளின் வெறி அடங்கவில்லை. அவர்கள் இன்னும் நிறைய இரைகளை எதிர்பார்த்தனர். கொலை வெறியோடு பத்திரிகை மடிக்கும் பகுதிக்கு உள்நுழைந்து "எல்லாரும் நிலத்தில விழுந்து படுங்கோடா!" என்று உச்சஸ்தாயியில் கத்தினர். வீழ்ந்து படுத்தவர்களில் ஒருவரான ரஞ்சித்குமார் ராஜரட்ணம் தலையை மெல்ல நிமிர்த்த முனைகையில் நெஞ்சில் பாய்ந்தது துப்பாக்கிரவை. சில நாள்களுக்கு முன்னரே இல்லற பந்தத்தில் இணைந்திருந்த ரஞ்சித், மணமாலை வாடுவதற்கிடையில் பிணமாகிப் போனார். ரத்தம் ஆறாகப் பெருக, அதனை மிதித்த படி ஆசிரிய பீடத்தை நோக்கி ஆவேசமாக ஆயுததாரிகள் நெருங்கினர். வெளியில் கேட்ட வேட்டொலிகளாலும், மரண ஓலங்களாலும் எச்சரிக்கையடைந்த ஆசிரியபீடத்தினர் பாதுகாப்பான இடமொன்றில் பதுங்கிக் கொண்டனர்.
பெரும் வேட்டைக்காக நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்த கொலையாளிகள் ஆசிரியபீடத்தில் எவருமே இல்லாததைக்கண்டு ஏமாற்றமடைந்தனர். தங்கள் இயலாமையை கணினிப்பிரிவிலிருந்த கணினிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மீது காட்டினர். கண்மூடித்தனமான அவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தால் கணினிப் பிரிவு ஒரு நொடியில் சிதைந்து சின்னாபின்னமானது. குற்றுயிராய் கிடக்கும் கணினிகளைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தபடி வெளியேறிய கொலையாளிகள் வாசலில் கிடக்கும் சடலங்களைப் பார்த்து அகந்தையுடன் மறைந்து விட்டனர்.
20 நிமிடங்கள் வரை நீடித்த இந்தக் கொலை வெறியாட்டம் ஆயுததாரிகளின் வெளியேற்றத்தோடு முடிவுக்கு வந்தது. அடுத்த நாள் மே3 ஆம் திகதி உலக ஊடக சுதந்திரதினம் அனுஷ்டிக்கப்படவிருந்த தருணத்தில், அதிகாரபீடத்தின் ஆசீர்வாதத்தோடு இயங்குகிற ஆயுதக் கும்பலால் உதயன் பணியாளர்கள் இருவரின் உயிரைக் குடித்த கோரச் செயலால் உலகமே அதிர்ச்சியில் உறைந்தது. இதற்கு முன்னரும் பல தடவைகள் உதயனின் மீதும் அதன் பணியாளர் மீதும் தாக்குதல் முயற்சிகள் நடந்திருந்தாலும் உதயன் அலுவலகத்துக்குள் உட்புகுந்து உயிரைக்குடித்த நிகழ்வு அப்போதுதான் முதன்முறையாக நடந்தேறியது. இத்தோடு 'உதயனின் கதை முடிந்தது' என்றெண்ணி மிட்டுக் கொண்டனர் ஆயுததாரிகள். ஆனால் அடுத்த நாளின் காலைப்பொழுது அவர்கள் கன்னத்தில் பளார் என அறைந்தது. ரத்தத்தின் பிசுபிசுப்போடு, மரணங்கள் தந்த வலிகளைச் சுமந்த பின்னரும் நெஞ்சுறுதியோடு அடுத்தநாள் (மே - 3) உதயன் வழமை போலவே ஊரெங்கும் உதித்தான். என்னதான் ஆயுதமுனையில் உண்மையின் குரல்வளையை நசுக்க முனைந்தாலும், எல்லாவற்றையும் தகர்த்தெறிந்தபடி உள்ளதைச் சொல்வதற்காக மக்களுக்கு நல்லதைச் செய்வதற்காக உதயன் வந்தே தீருவான் என்ற உண்மை அதன் மூலம் உணர்த்தப்பட்டது. எனினும் அதன்பின்னரும் உதயனின் வருகையைத் தடுக்க பல முயற்சிகள் அதே ஆயுததாரிகளால் எடுக்கப்பட்டன. பத்திரிகையைத் தீயிட்டு எரித்தல், விநியோகத்தைச் சீர்குலைத்தல், தொலைபேசி மிரட்டல்கள், எச்சரிக்கைக் கடிதங்கள், கைக்குண்டு வீச்சுக்கள் என நீண்டு சென்ற முயற்சிகள் எல்லாம் உதயனின் வருகையைப் பாதிக்கவே இல்லை. மாறாக ஒவ்வொரு அடியும் விழ விழ உதயன் இன்னும் உயிர்ப்போடு எழுந்தான். பொய்மைகளைச் சுட்டெரித்தான்.
இப்போதும் அவன் கதிர்கள் உண்மைக்காக, தமிழ் மக்களின் உரிமைக்காக தினமும் திக்கெட்டும் பரவியபடியேதான் இருக்கின்றன. ■

## அஞ்சலிப்போம்



பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)
(விற்பனை முகாமையாளர்)



இராஜரட்ணம் ரஞ்சித்குமார்
(விநியோகப் பகுதி பணியாளர்)

உதயத்தில் உதயன் கற்றோர் உள்ளங்கள் உவகை கொள்ளும்
இதயமுள்ளோர்கள் ஆவல் கணித்திடத் தேடி நிற்பார்
புதியன பூக்கும் வல்லோர் புலமையை ஏற்றும் போற்றும்
அதிபெரு வளர்ச்சி இந்த அகிலஉலகமும் உதயனின் சுற்றம்

தெருக்களும் ஊரும் பேரும் தீமைகள் குறைக்கத் தேடும்
உருக்கொளும் கொடுமை யாவும் ஒழித்திடக் கூடும் ஆயும்
செருக்கிலான் பயணம் மக்கள் சேவையே மகேசன் சேவை
இருக்கிறான் பயமேதென்பார் இதயத்தே உதயன் உள்ளான்

நெருப்பென உலவி வந்தான். நீறிட்டான் பொய்மை கொன்றான்
பெருக்கினான் இனிமை தூய்மை பெருகிடும் உதயன் கண்டோ!
சுருக்கிட நினைத்தார் ஊடக சுதந்திரம் அழிக்க வந்தோர்
வருத்தினார் எரித்தார் எங்கள் வளங்களைச் சிதைத்து நின்றார்

ஆயுதம் தரித்தோர் செய்த அநீதிக்கு உதவி நின்றோர்
தூய சிந்தனையின் முன்னே துலங்கிடும் வலிமை அற்றோர்
நேயமாய் பணி தொடர்ந்த நியாயத்தைக் கொல்ல நின்றார்
தாய்நிலத் துயர்ந்த செய்தித் தாளின் மேல் பொறாமை கொண்டார்

ஊடக சுதந்திரத்திற்கொரு தினம் உலகம் போற்றும்
ஏடிதன் பெருமை ஓங்கும் ஒரு சிலர் ஏனோ? அறிவின்
கூடமாய் ஒளியாய் தோன்றும் குன்றதன் கருப்பைத் தீய்த்தே
காடதாய் மாற்றும் தீய கயவராய் கோலம் கொண்டார்?

கடமையாம் ஊடகத்தின் கருத்துரை சுதந்திரத்தை
அடக்கிடத் துணிந்தெம் அன்பின் ஊழியர் உயிரைக் கொன்றார்
திடமன துடையோம் அந்த அநீதியின் ஐந்தாம் ஆண்டு
நினைவினில் வைத்தோம் அன்பின் தீபமிட்டஞ்சலிப்போம்.

நிர்வாகத்தினரும் பணியாளர்களும்
உதயன் வெளியீட்டகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 10 . 1951

மறைவு 01 . 05 . 2023

## திருமதி வைத்திலிங்கம் நாகேஸ்வரி (தேவி)

நீதிமன்ற வீதி, மல்லாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் நாகேஸ்வரி நேற்று (01.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் (சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், பார்வதிப்பிள்ளை, தங்கம்மா மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகரன் (Mercantile Security Company ஊழியர் - சம்பத் வங்கி - திருநெல்வேலி), திருபரன் (மின்சார வல்லுநர்), கோகிலவாணி (ஆசிரியர் - புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 8281 101
077 796 7513
077 5589 133

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24696) A-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 05 . 1959

மறைவு 01 . 05 . 2023

## சரவணமுத்து இரவீந்திரன்

அல்லாரை வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இரவீந்திரன் நேற்று (01.05.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து சரஸ்வதி தம்பதியரின் அன்புப் புதல்வரும், துரைராசா மீனாட்சி இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், அமரர் மங்களேஸ்வரி, அமரர் பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தயாநிதியின் அன்புக் கணவரும், கார்த்திகா, டர்சிகா, கேசிகா, சரவணபவன், யனுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் பிரமோகன், சியாந்தன், பபுஜன், மதுசனா, உதயராகவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யதுசரன், ஷகானா, சாத்விகா, விருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சந்திரசேகரப்பிள்ளையார்
கோவில் வீதி, கல்வியங்காடு.
077 877 9785

தகவல்:
குடும்பத்தினர்.

# 6ஆம் ஆண்டு நினைவுகளுடன்



திருமதி
## டொறின்மேரி அருள்வதனன்

தோற்றம்
03.06.1976

மறைவு
02.05.2017

ஈர் மூன்று ஆண்டுகள் கடந்தது எப்படியோ?
அன்பின் இலக்கணமாய் நீர் அம்மா எங்கள் நெஞ்சில் நீர்
அகிலமுள்ளவரை அன்பின் பிணைப்பு நீ
ஆறவில்லை எம் வலிகள் ஆறு ஆண்டு கடந்த போதும்
மாறா நினைவுகளோடு...........

பிரிவால் துயருறும்
கணவர் - அ.அருள்வதனன்
பிள்ளைகள் - சபிஷன், ரிஷாநாத் நிபோஷன்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
077 645 0304 (cs 50256) (N.1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 . 08 . 1939

மறைவு 12 . 05 . 2022

மயிலங்கூடலூர்
## பி.நடராசன்

இல்லறத்தை எனக்களித்த நல்லதொரு துணைநீர்
இலக்கியங்கள் பல படைத்த எழுத்தாளர் கவிஞர்
நல்லதொரு ஆசானாய் கல்வியினால் நிறைந்தீர்
நாமெல்லாம் கலங்கியழ ஏன் எம்மைப் பிரிந்தீர்?
ஆண்டு பல ஆனாலும் உம் நினைவாய் இருப்போம்!
அன்போடு நீர்தந்த வாழ்க்கையினை மறவோம்!

314, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு. (cs. 24681) (2.6)

உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
30.08.1968

மறைவு :
03.05.2012

## அமரர் கைலைலிங்கம் முருகதாஸ்

(முன்னாள் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்)

திதி: துவாதசி (02.05.2023)

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

28/7, இராமகிருஸ்ணா
பாடசாலை வீதி, கோண்டாவில்
கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்

## பொருளாதாரச் சவாலை எதிர்கொள்ள கலந்துரையாடல்

யாழ்., மே 2

நாட்டின் பொருளாதாரச் சவால்களை எவ்வாறு வெற்றி கொள்வது? என்பது தொடர்பில் தொழிலதிபர் திலீத் ஜயவீர தலைமையில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. திருநெல்வேலியிலுள்ள தனியார் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது நாட்டின் பொருளாதார சவால்களை எவ்வாறு வெற்றி கொள்வது? புதிய தொழில்வாய்ப்புகளை எவ்வாறு ஏற்படுத்துவது தொடர்பில் பிரபல தொழிலதிபரும் ஊடக நிறுவனத்தின் பணிப்பாளருமான திலீத் ஜயவீரவால் விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து கருத்துப் பகிர்வுகளும் இடம்பெற்றன. கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட முன்னாள் இராணுவ கட்டளைத் தளபதி கொடித்துவக்கு, தேசிய ஒருமைப்பாடு இன நல்லிணக்க அதிகார சபையின் பணிப்பாளர் கந்தையா கருணாகரன், யாழ். வணிகர் சங்கத் தலைவர் ஜெயசேகரம் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்

## மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்பும்

## அதிபர்
## திரு. தில்லையம்பலம் மதிவதனன்




1. ஆரம்பக்கல்வி - கிளி/ இராமநாதபுரம் அ.த.க பாடசாலை
2. 06 – O/L - யா/நயினாதீவு கணேசா மகா வித்தியாலயம்
3. A/l - நயினாதீவு மகா வித்தியாலயம்
4. B.A கலைமாணி - பேராதனைப் பல்கலைக்கழகம்

**சேவை விபரம்**

1. யா/ எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் (ஆசிரியர்) - 27.11.1989 - 31.12.1993
2. யா/ வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் (ஆசிரியர்) - 01.01.1994 - 23.01.1994
3. யா/ யாழ்ற்ரன் கல்லூரி (ஆசிரியர்) - 24.01.1994 - 09.02.2010
4. யா/ஊர்காவற்றுறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலை (அதிபர்) - 10.02.2010 - 04.03.2018
5. யா/யாழ்ற்ரன் கல்லூரி (அதிபர்) - 05.03.2018 - 01.05.2023

### மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

**திரு.தி. ஜோண் குயின்ரஸ்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்,**
**வடமாகாணம்.**

கல்வித்துறையில் 34 வருடகாலமாக சிறப்பான சேவையினைக் கொண்ட அதிபர் திரு.தில்லையம்பலம் மதிவதனன் அவர்களின் கல்விச் சேவையை நயந்து வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன். திரு. தில்லையம்பலம் மதிவதனன் அவர்கள் பல பிரதேசங்களிலே ஆசிரியராகவும், அதிபராகவும் பல்பரிமாணங்களில் எமது சமூகத்துக்காக அளப்பரிய கல்விச்சேவையினை ஆற்றியுள்ளமை பாராட்டுக்குரியது.
இவர் 2010 இல் யா/ஊர்காவற்றுறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையிலும் 2018 ஆம் ஆண்டில் இருந்து யா/காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றினார். இவர் தனது தலைமைத்துவ ஆற்றலினால் தான் பொறுப்பேற்றுக்கொண்ட பாடசாலைகளில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு சிறந்த அதிபராகத் திகழ்ந்தார். கல்விச்சேவையில் இணைந்த காலத்திலிருந்து ஓய்வு பெறும் வரை மாணவர்களின் பன்முக ஆளுமை விருத்திக்காக அயராது உழைத்தார்.
எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பணியாற்றிய இவரின் சேவையினைப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வு காலம் சிறக்க வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

### மணிவிழா வாழ்த்துச்செய்தி

**திரு. ம.மகேந்திரன்**
**கோட்டக் கல்வி அதிகாரி காரைநகர்.**

தில்லையம்பலம் செல்வராணி நயினாதீவைச் சேர்ந்த தம்பதியினருக்கு மகனாக அவதரித்தவர் மதிவதனன் ஆரம்பக் கல்வியை கிளி/ இராமநாதபுரம் அ.த.க பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யா/ நயினாதீவு கணேச வித்தியாலயத்திலும். யா/நைனாதீவு மகா வித்தியாலயத்திலும் கற்று பொதுக் கலைமாணி (B.A) படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும். பட்ட மேற்கல்வி டிப்ளோமாவை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்தார் முன்னர் ஆசிரியராகப் பணியாற்றிய யாழ்ற்ரன் கல்லூரியில் 05.03.2018 அன்று அதிபர் பணியைத் தொடர்ந்தார் ஆசிரியராகவும் அதிபராகவும் இப் பாடசாலையில் பணி செய்யக் கிடைத்தமை அவருக்குக் கிடைத்த சிறப்பு ஆகும்.
பாடசாலைக்குச் செல்லும் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களது தேவைகளுக்கேற்ப விடயங்களை ஒழுங்கமைத்துக் கொடுப்பர். பாடசாலைச் செயற்பாடுகளில் தலைமைத்துவ, முகாமைத்துவச் செயற்பாடுகளை காண முடியும் கொரோனா பெருந்தொற்றுக் காலத்திலும் சிறந்த பணியாற்றியவர் மாணவர் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பர்
தமிழ் மொழி. இந்து சமயம் போன்ற பாடங்களில் ஆழ்ந்த அறிவு கொண்டவர். சமூகம் பயன் பெறுவதை நோக்காக் கொண்டு பல நூல்களை இயற்றியுள்ளார். மற்றவர்களுக்கு துன்பம் வருகின்ற போது தனக்கு ஏற்பட்ட துன்பம் போல் உதவும் மனப்பாங்கை நான் அறிவேன் அதிபர் மதிவதனன் அவர்கள் தனது மனைவி இரண்டு பிள்ளைகளுடனும் அனைத்துச் சிறப்புக்களையும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்

### நயினை மண் தந்த யாழ்ற்ரன் அன்னையின் மணிவிழா காணும் இந்நாளில் முதல்வன் அவரை வாழ்த்துவதில்பெருமகிழ்வடைகின்றேன்.

**பிரதி அதிபர்,**
**திருமதி அஜந்தினி யதீஸ்குமார்**
**யா/யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.**

அன்னையின் நிழலில் 16 ஆண்டுகாலம் ஆசிரிய பணிபுரிந்து 5 ஆண்டுகாலம் அதிபர் பணியாற்றி அன்னையின் 75 ஆண்டில் ஆவது மணிவிழாவை காணும் பெருமைக்குரியவர் தனது சேவைக்காலத்தில் கல்விவளர்ச்சியில் மட்டுமன்றி இணைப்பாட விதான செய்ற்பாடுகளிலும் பௌதீகவள அபிவிருத்தியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியவர் அன்பாகவும் பண்பாகவும் பேசும் திறன் படைத்தவர். அளப்பரிய பணியாற்றி இன்றைய தினம் இளைப்பாறும் மணிவிழாநாயகனும் அவர் தம் குடும்பமும் நயினை அம்மன் அருள் பெற்று நீண்ட ஆயுளோடும் ஆரோக்கியத்தோடும் ஓய்வு காலம் மகிழ்வுற வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு. திருஞானசம்பந்தபிள்ளை ஞானசுந்தரன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம் வேலணை.**

திரு.T. மதிவதனன் அவர்கள்(இலங்கை அதிபர் சேவை-2) (SLPS 2) தமது 60வது வயதில் அரச சேவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறுகின்றார். இவர் 2.11.1989 ஆண்டில் யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்று 31.12.1993 வரை அங்கு சிறப்பாகக் கடமையாற்றி பின்னர் யா/வேலணை கிழக்கு ம.வி. யா/யாழ்ற்ரன் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றி 10 .02.2010 முதல் யா/ஊர்காவற்துறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் அதிபர் சேவையில் அதிபராக கடமையை பொறுப்பேற்று 04.03.2018 வரை அங்கு கடமையாற்றினார் அப்பாடசாலையில் முதன் முறையாக 3 மாணவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்தியடைந்து சாதனை புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. யா/காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் 5.03.2018 முதல் அதிபராகப் பதவியேற்று 5 வருடங்கள் சிறப்பாகக் கடமையாற்றி அரச சேவையிலிருந்து இளைப்பாறுகின்றார். 16 ஆண்டுகள் யாழ்ற்ரன் கல்லூரியில் சிறந்த ஆசிரியராக தமிழ். இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்பித்து பல மாணவர்களது உயர் நிலையில் விளங்க வழி காட்டியாக விளங்கியுள்ளார்.
இவரது காலத்தில் தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்கள் குழுப் பாடலில் 1ம் இடத்தினை பெற்றுக் கொண்டமை பாராட்டுதலுக்குரியது மேலும் புத்தாக்கக் கண்டுபிடிப்பிலும் மாணவன் ஒருவன் தேசிய மட்ட போட்டி வரை சென்று பங்குபற்றியமை சிறப்பம்சமாகும். பாடசாலை மைதானம் புனரமைக்கப்பட்டது.
இவரது சேவை காலம் முழுவதும் தற்போதைய தீவக வலயப் புவியியல் பரம்பலுக்குள் ளேயே அமைந்திருப்பது பாராட்டுதலுக்குரியதும் தற்போதைய சேவ்வயிலுள்ளோருக்கு ஒரு முன் மாதிரியாகும்
இவர் தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தினருடன் நலமாக மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திரு. வேலுப்பிள்ளை முருகமூர்த்தி**
**முன்னாள் அதியர், யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.**

யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் உயர் திரு.தில்லையம்பலம் மதிவதனன் அவர்களின் அகவை 60 இற்கான மணிவிழாவில் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.
உயர்திரு மதிவதனன் அவர்கள் 14 ஆண்டுகள் கல்லூரியின் உயர்தர வகுப்புகளில் தமிழ்மொழிப் பாடத்தினை உயர் துடிப்புடனும். அர்ப்பணிப்புடனும் கற்பித்த ஒர் ஆசிரியப் பெருந்தகை ஆவார். பதவி உயர்வின் காரணமாக வேறு பாடசாலைக்கு அதிபராக மாற்றலாகிச் சென்று. மீண்டும் 2015 ஆம் ஆண்டு முதல் யாழ்ற்ரன் கல்லூரி அதிபராக தொடர்ந்து 5 ஆண்டுகள் .செயற்பட்டவர். இவரின் இச்சேவைக்காலத்தில் மாணவர்களின் தேசியப் பரீட்சை பெறுபேறுகள் மிகவும் உயர்வானதாகக் காணப்பட்டன. இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்று வெற்றிகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். மேலும் கல்லூரியின் பௌதீக வள வளர்ச்சியும் சிறப்பாக அமைந்துள்ளது. அதிபர் மதிவதனன் அவர்களின் தன்னலமற்ற சேவையை பாராட்டுவதுடன், அவரின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர கூத்தப் பிரான் அருள் புரிவாராக.

### வாழ்த்துச் செய்தி

**திரு. கெங்காதரன் ஜனகன்**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.**

யா/ யாழ்ற்ரன் கல்லூரியின் அதிபர் திரு. தில்லையம்பலம் மதிவதனன் அவர்கள் தமது 60 ஆவது வயதை பூர்த்தி செய்து கொண்டாடும் மணி விழாவில் வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன் கிட்டத்தட்ட மூன்று தசாப்த கால கற்பித்தல் பணித்துறையில் கடமையாற்றி ஓய்வு பெறுவது பெருமையான விடயமாகும் பாடசாலை. யின் அதிபராகப் பொறுப்பேற்று பல பணிகளை ஆற்றி வந்தமை சிறப்பான அம்சமாகும் சிறந்த இந்து நாகரீக பாட புலமை இவரது விசேட சமய பாடத்துறை விடயமாகும் இவரது ஓய்வு காலம் பயனுள்ளதாகவும் சிறப்பாகவும் அமைய வேண்டுமென எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தானை வேண்டிப் பணிகின்றேன்.

### வாழ்த்துச் செய்தி



**திருமதி சிவநாதன் மஞ்சுளா**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.**

தமிழை அமுதம் எனப்
பருகும் தண் மதியே!
நீங்கள் அகவை அறுபதிலே
இன்று கால் பதிக்கும்
வேளையிலே மாணவியாய்
அபிவிருத்திச் சங்க செயலாளராய்
சிறியேன் வாழ்த்தும் பாமாலை
சித்த மெல்லாம் அன்னை
நயினையை இருத்தி
எம் கல்லூரிக்காக ஆசிரியராய்
அதிபராய் நீர் செய்த
சேவைதனை வாழ்த்தி
தாங்கள் ஓய்வுக்காலம்
சிறக்க அன்னையின் பாதம் பணிகின்றேன்

### வாழ்த்துச் செய்தி

**பாடசாலை நலன்புரிக் கழகம்,**
**யா/ யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்**

நயினை மண் பெற்றெடுத்து இன்று காரை தில்லைக் கூத்தனின் மண்வாசனையுடன் மணிவிழா காணும் யா/யாழ்ற்ரன் கல்லூரி யின் முதல்வர் திரு. தில்லையம்பலம் மதிவதனன் அவர்களை இந்த பொன்னாளில் வாழ்த்துவதில் பாடசாலை நலன்புரிக் கழகம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது
இந்த வகையில் 2001 ஆம் ஆண்டு யா/யாழ்ற்ரன் கல்லூரிக்கு ஆசிரியராகக் காலடி எடுத்து வைத்த இவர் தமிழையும் இந்துநாகரீ கத்தையும் தமது இரு கண்கள் போல் பேணி உயர்தர மாணவர் களுக்கு ஊட்டி மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு உழைத்தவர் என்பதில் எது வித ஐயமுமில்லை.இவர் தனது ஆசிரியர் பணியில் இருந்து கொண்டே ஈழத்து இலக்கிய வரலாறு ஈழத்து இந்து மத வரலாறு போன்ற நூல்களை மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் எழுதி தமிழ் உலகில் தவழ விட்டுள்ளமை பெருமைக்குரிய விடயம் மட்டுமல்லாது இவரது தமிழ்ப் புலமை. தமிழ் மீது கொண்ட பற்று போன்றவற்றை எடுத்துக் காட்டுகின்றது. இத்துடன் அமைப்பினில் பாடல் சொல்லும் இலக்கியச் செம்மல் என்று கூறுவது மிகையாகாது.
பல ஆண்டுகள் ஆசிரியராகப் பயணித்த இவர் 2018 ஆம் ஆண்டு இக் கல்லூரியில் முதல்வராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தனது பெயருக்கேற்றால் போல் எந்நேரமும் சிரித்த முகத்துடன் ஏசினாலும் மறுகணம் மறந்துவிடும் பண்பைக் கொண்டவர் எல்லோரிடமும் கதைத்துப் பழகும் பண்பினை உடையவர்.
இவருடைய காலத்தில் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் ஒரு வளர்ச்சிப் போக்கைக் காட்டியுள்ளமை கண்கூடு. இத்தகைய முதல்வர் ஈழத்து சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமான் சமேத சௌந்தராம்பிகை [illegible] தமது [illegible] சகல செல்வங்க[illegible] வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச்சங்கம்**
**யா/ யாழ்ற்ரன் கல்லூரி,**
**காரைநகர்**
Congratulations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தனியார் மயப்படுத்தினாலே நிறுவனங்கள் இலாபமீட்டும்!

## ஐ.தே.க. முன்னாள் எம்.பி. ஆசுமாரசிங்க தெரிவிப்பு

ரெலிக்கொம் நிறுவனத்தில் அதிக இலாபம் ஈட்டுவதற்கு தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தின் எந்தச் சொத்துக்களையும் அரசாங்கம் விற்காது. காணி, நிறுவனங்களின் உரிமையை வைத்துக்கொண்டு குத்தகை அடிப்படையிலேயே தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும்.

52 அரச நிறுவனங்கள் 2022ஆம் ஆண்டில் அடைந்த நட்டம் 932 பில்லியனாகும். ரெலிக்கொம் நிறுவனம் 163 வயதைக் கொண்டது. இருந்தும், தொலைபேசி இணைப்பு ஒன்றைப் பெறுவதற்காக பாடுபட்டோம். இன்று அதன் பங்குகள் ஜப்பான் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டதால் அந்தப் பிரச்சினைகள் இல்லை. இலாபம் ஈட்டும் நிறுவனமாக ரெலிக்கொம் மாறியுள்ளது. அந்த நிறுவனத்திடம் இருக்கின்ற வளங்களுக்கு ஏற்ப இன்னும் இலாபம் ஈட்டமுடியும். அதற்கு ஏற்ப அதை இன்னும் மறு சீரமைக்கவேண்டும். குறைந்த ஊழியரைக் கொண்டடய லொக் நிறுவனம் அதிக இலாபம் பெறுகின்றது. கூடிய ஊழியர்களைக் கொண்ட ரெலிக்கொம் அதைவிடக் குறைந்த இலாபத்தையே பெறுகின்றது. அதிக இலாபம் ஈட்டும் நிறுவனமாக ரெலிக்கொம்மை மாற்ற வேண்டும் என்றால் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து மறுசீரமைப்புச் செய்யவேண்டும் - என்றார். (எ-14-22)

# வகுப்பறைகளிலேயே முடக்காது இயற்கையை நேசிக்க விடுங்கள்

## பெற்றோரிடம் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், மே 2**

**பாடசாலைக் கல்வி ஒரு மாணவனை முழு மனிதனாக்கும் என்ற நம்பிக்கையை களைந்தெறிந்து வாழ்க்கைக்கான அனுபவக் கல்வி வகுப்பறைகளுக்கு வெளியேயும் உள்ளது என்பதை பெற்றோர் உணர்ந்து செயற்படவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார்.**

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

அனுபவத்தைவிட சிறந்த ஆசான் உலகில் வேறெதுவும் இருக்கமுடியாது.

அந்த அனுபவத்தைப் பெறமுடியாதவாறு பாடசாலை வகுப்பறைகளுக்குள்ளும் தனியார் கல்வி நிறுவனங்களின் கொட்டகைகளுக்குள்ளுமே மாணவர்களை பெற்றோர் முடக்குகின்றனர். பிறநிகழ்ச்சிகளில் மாணவர்கள் கலந்துகொண்டால் கல்வி பாதிக்கப்படும் என்று பெற்றோர் கருதுகிறார்கள்.

மாணவன் ஒருவன் உயர்ந்த சித்திகளைப் பெற்றிருந்தாலும் கூட கல்வியை முடித்து வெளியே வரும்போது வாழ்க்கையில் தடுமாற நேரிடுகின்றது.

வாள்வெட்டு. போதைப்பொருள் பாவனை என்று எமது பண்பாட்டுச் சூழல் சீர்கெட்டிருக்கும் நிலையில் பிள்ளைகளை வெளியே அனுப்பினால் அவர்கள் தவறாக வழிநடத்தப்படுவார்கள் என்று பெற்றோர் அஞ்சுகின்றனர்.

இன்று பிரபல்யமான பாடசாலைகளில் பயிலுகின்ற மாணவர்கள் கூட போதைக்கு அடிமையாகியுள்ளனர். பெற்றோர் பிள்ளைகள் மீது சந்தேகம் கொள்ளாமல் அவர்களைக் கண்காணித்தவாறு இதர நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் பங்கேற்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

வகுப்பறைகளுக்கு வெளியே இயற்கை கற்றுத் தரும் நேசிப்பு சுற்றுச்சூழலைச் சீரழிக்காதவாறு இயற்கையுடன் இசைந்து வாழ்வதற்கு கற்றுக்கொடுக்கும்.

சகமனிதர்கள் மீதான நேசமே இன்று சமூக வன்முறைகளைக் களைவதற்கான தீர்வாகவும் அமையும், பெற்றோர் அதற்கு ஆதரவளிக்கவேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பெண்போன்று வேடமிட்டு கோழிகள் திருட முயற்சி

கொழும்பு, மே 2
பொகவந்தலாவை ஆரியபுர கொலணி வீடுகளில் வளர்க்கப்பட்ட கோழிகளைத் திருட பெண் போன்று வேடமிட்டு வந்த நபரொருவர் நேற்று முன்தினம் இரவு பிடிபட்டுள்ளார்.

எவரோ வருவதை அவதானித்த நாய் சத்தமிட்டு வீட்டின் உரிமையாளர்களை எச்சரித்துள்ளது. இதையடுத்து அந்த வீட்டின் உரிமையாளரான பெண்ணொருவர் வெளியே வந்து பார்த்தபோது கோழிகளைத் திருட வந்தவரை அவதானித்து அவரைக் கையும்களவுமாகப் பிடித்துள்ளார்.

அதன் பின்னரே திருட்டுக்காக வந்தவர் ஆண் எனவும் அவர் பர்தா அணிந்து வந்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

(ம)


# மரண அறிவித்தல்



பிறப்பு 23.03.1933

இறப்பு 01.05.2023

## திருமதி
## குமாரசாமி சிவஞானவதி

சங்கானையை பிறப்பிடமாகவும், மில் லேன் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சிவஞானவதி நேற்று (01.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரவணமுத்து சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி, அழகேந்திரம், இராசேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நண் பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 672 8446

(CS 24695)A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 07 . 1967



மறைவு 01 . 05 . 2023

## திருமதி தர்மலீலா சிசுபாலன் (ரஞ்சினி)

இணுவிலை பிறப்பிடமாகவும் "லவ்லேன்" உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலீலா சிசுபாலன் நேற்று (01.05.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நடராஜா சிசுபாலனின் (N.சிவா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீனிவாசகம் மயில்வாகனம் மற்றும் செல்வபாக்கியலச்சுமி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தருமசோதி மற்றும் சரவணபவன், பரந்தாமன் (ஆசிரியர் - யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை), கமலினி (கனடா), வேணுகோபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசந்தா - தியாகராசா, ஈஸ்வரபாலன் - மங்களாம்பிகை, கணேசபாலன் - சிவாஜினி, சிறிபாலன் - ராஜி (கனடா), அனுஷா - யோகநாதன் மற்றும் பவளம், வரதலச்சுமி, சுகன்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழிற்துறை திணைக்களம், வடமாகாணம்), சண்முகதாஸ் (கனடா), தட்ஷாயினி ஆகியோரின் மைத்துனியும், பிரபாலினி, பிரதீபா, பிரசாந்தி, விதுசிகா, மதுஷா, கேதுஷா, ரிலக்ஷன், யோகலக்ஷா மற்றும் மயூரதன், ராகவி, சர்கவி, சண்முஹானுஜன், கோகர்ணன், செந்தூரி, நசீர்மன், குமனேஸ் ஆகியோரின் பாசமிகு அத்தையும், வைஸ்ணவி, சாயகி, சானுகன் ஆகியோரின் பெரியம்மாவும், கயந்தன், கபிலன், கௌதமன், சிவப்பிரியா, விதுரா, ரதீனா, ரஜித்தா, வேணுகா, யாதவன், புவனி ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

லவ்லேன், உடுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 662 1756
077 033 4914

(CR 39762) A-1

# மரண அறிவித்தல்



## திருமதி வல்லிபுரம் அன்னப்பிள்ளை

யாழ்ப்பாணம் மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.வல்லிபுரம் அன்னப்பிள்ளை நேற்று முன்தினம் (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், அமரர். நாகமுத்து வல்லிபுரம் அவர்களின் அன்புத் துணைவியும், அருளப்பன், ஆனந்தன், இரவீந்திரன், இந்துமதி, உமாமதி, சந்திரமதி மற்றும் எழில்மதி ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளப்பன் கிருஸ்ணமதி, ஆனந்தன் நந்தினி, இரவீந்திரன் நந்தினி, பிறேம்குமார், யோகநாதன், ஸ்ரீகுமார், காந்திகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அரண்யா, ஆதித்யா, அஸ்வினி, அனோஜினி, ஆதவன், பரணிதரன், பானுசங்கர், பிரணவன், சாரங்கன், சஞ்சீவன், பகீரதி, பிரியங்கா, பிரியமேகலா, எழில்வேணி, மேழினி, அச்சுதன், பிரசன்னா, சியாம், ஹரி, ஆரபி ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் கிழக்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மட்டுவில் வண்ணாத்திப் பால இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல-17, சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
தொடர்புகளுக்கு:- 0776525410, 0772719099.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 10 . 1942



இறப்பு 01 . 05 . 2023

## இராசையா நந்தாவதி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நந்தாவதி நேற்று (01.05.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், சரோஜா, இராஜேந்திரன் (Denmark), இராஜேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (London), நந்தகுமார், காலஞ்சென்ற நந்தினி, காலஞ்சென்ற சசிகுமார் மற்றும் ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவமணி, கௌரீஸ்வரி, குகணேசமித்திரன், சாந்தி, சாந்தி (London), மதிவதனி ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீபன், பிரதீபா, மதிவதனி (Swiss), ரேவதி (London), திலக்ஷன் (Denmark), டிலுக்ஷன் (Denmark), இராஜேஸ்மித்திரன், கநேஸ்மித்திரன், ரவேந்திகா (Germany), சிவசுவியா (London), சுவிகரன் (London), தனுஷன், சதுஷா, நிஜிதா, நீரஜன் ஆகியோரின் பேர்த்தியும், ஜனனி, யதுர்ஷிகா, பிரவீன், மதுஷி, கஜீபன் (Swiss), கஸ்வினி (Swiss), சத்தியன், ஓமிக்கா (London), சியான் (London), கபிஷா, ஹனுலக்சர்ஜா (Germany), தனவந்தியா (Germany) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.14, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 7110 505
077 886 9202

(CS 24753) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினைத்...

நேற்று சுகதாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினூடாக உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த மூன்று தசாப்தங்களாக நாடு கடுமையான பொருளாதார வீழ்ச்சியில் இருந்த நேரத்தில் நான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றேன். நாட்டின் பொருளாதாரம் முற்றிலுமாக வீழ்ச்சியடைந்து, உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததோடு, மக்கள் வீதிகளுக்கு இறங்கியிருந்தனர். இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு இந்த நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பையும், நாடாளுமன்றத்தையும் சிதைக்க சிலர் முயன்றனர்.

இன்று நாட்டின் பொருளாதாரம் மீண்டும் ஸ்திரத்தன்மை அடைந்துள்ளது. உணவுத் தட்டுப்பாடு இல்லை. நாட்டில் ஜனநாயகக் கட்டமைப்பு செயற்படுகின்றது. அச்சுறுத்தல்கள் இன்றி நாடாளுமன்றம் செயற்படுகின்றது. ஒவ்வொருவரும் தங்களுடைய பணியைத் தடையின்றி மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வது அவசியம், உலக வங்கியின் உதவி தேவை. 7 பில்லியன் டொலர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் 2020 தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் குறிப்பிட்டிருந்தோம். கட்சி என்ற வகையில் நாங்கள்தான் அந்த உண்மைகளைக் குறிப்பிட்டோம். உண்மையைக் கூறிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு இறுதியாகத் தேசியப்பட்டியல் ஆசனம் மட்டுமே கிடைத்தது.

கசப்பானாலும் உண்மையை மக்களுக்குச் சொல்வதே எங்களின் கொள்கையாகும். அதனால் நாங்கள் அதிலிருந்து பின்வாங்கவில்லை. 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளிலும் எங்களின் இலக்கு அறிவிக்கப்பட்டது. 2022ஆம் ஆண்டு, இந்தப் பிரச்சினை தீவிரமடைந்தபோது, அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைச் சந்தித்து, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுங்கள் என்று அவருக்கு ஆலோசனை வழங்கினேன்.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தபோது எதிர்க்கட்சியின் ஏனைய குழுக்கள் கலந்துரையாடலைப் புறக்கணித்தபோதும் நானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கட்சியில் இருந்து கலந்துகொண்டோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடியை என்னால் எதிர்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். தற்போது நாடாளுமன்றம் இயங்கி வருகின்றது. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின்படி செயற்படுபவர்கள் பலர் உள்ளனர்.

இப்போது நாம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு அவசியமான சட்டதிட்டங்களைக் கொண்டு வந்து 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வர நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், நான் அதில் திருப்தியடையவில்லை.

தற்போதுள்ள இந்தப் பழைய பொருளாதார முறையுடன் இனியும் முன்னோக்கிச் செல்ல முடியாது. மொத்தத் தேசிய உற்பத்தியை ஆண்டுக்கு 6 வீதம் முதல் 7 வீதம் என்ற அளவில் விரைவாகக் கொண்டு வரக்கூடிய பொருளாதாரத்தை நாம் உருவாக்கவேண்டும்.

நாம் முன்னோக்கிப் பயணிக்கவேண்டுமாயின், நாம் இரண்டு விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

முதலாவது நாட்டில் உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இது தொடர்பாகப் பேச்சு நடத்தி வருகின்றோம். இந்த வருட இறுதிக்குள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது. பெரும்பான்மை சிங்கள மக்களையும், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்லவேண்டும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

இரண்டாவது இந்த நாட்டில் அரசியல், பொருளாதார முறைமையில் மாற்றம் வேண்டும் என்று இளைஞர்கள் கோருகின்றனர். நாம் அதைச் செவிமடுக்க வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காகப் பல கட்டங்களாக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கும், மேற்பார்வைக் குழுவுக்கும் தலா ஐந்து இளைஞர்களை நியமிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்தப் பணிகளை மே மாதத்தில் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம். கரு ஜயசூரியவின் ஆலோசனைக்கமைய மக்கள் சபைகளை உருவாக்குவதற்காக அதற்கான சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம். நாம் அனைவரும் உடன்பாட்டுடன் புதிய பொருளாதார முறைமையை ஏற்படுத்துவோம். புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவோம். நாம் முன்னோக்கிப் பயணிப்போம்.

இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க் கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாயின், தயவுசெய்து இந்தப் பொறிமுறைக்குள் வந்து விசேடமாக நாடாளுமன்றத்தில் ஓர் அரசாக நாம் அனைவரும் இணைந்துசெயற்படுவோம். இடதுசாரி கட்சிகள் தமது கொள்கைகளுக்கமைய இந்த நடைமுறையை பின்பற்றமாட்டோம் என்று கூறியுள்ளனர்.

நாம் தற்போது எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கவேண்டும். புதிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும். புதிய வேலைத் திட்டங்களுடன் அனைவரும் இணைந்துகொள்ள வேண்டும் என்று நான் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (அ-எ-22)

## போராட்டம்...

தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் மேதின கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியை ஆரம்பிக்கும்போது, வெற்றிபெற முடியாது, ஆட்சியைப் பிடிக்க முடியாது என்றெல்லாம் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், மக்கள் வரலாற்று வெற்றியை வழங்கினர். எனினும், மக்கள் எதிர்பார்த்தவற்றை உரிய வகையில் செய்ய முடியாமற்போனது. எடுக்கப்பட்ட சில தவறான முடிவுகள் இதற்குக் காரணமாகும். எங்கு தவறிழைக்கப்பட்டது என்பது எமக்குத் தற்போது தெரிகின்றது. இது தொடர்பான அனுபவம்கூட எமக்கு ஒரு பலமாகும்.

'கோல்பேஸ்' போராட்டத்தின் பின்னணியில் இருந்தது யார்? அவர்கள் இப்போது என்ன செய்கின்றனர் என்பது முழு நாடும் அறியும். நாட்டை பொறுப்பேற்கச் சொன்னபோது பின்வாங்கினர். அவ்வாறு செய்துவிட்டு, பொறுப்பேற்றவர்களை விமர்சிப்பதை செய்துவருகின்றனர். ஜனநாயக வழியில் அல்லாமல் ஆட்சியை முன்னெடுக்க முற்பட்டால் எதுவும் கிடைக்காது. தற்போதைய எதிர்க்கட்சிக்கு வேலைத்திட்டம் இல்லை. அதனால்தான் அரசின் நல்ல திட்டங்களையும் எதிர்க்கின்றனர்.

மேற்குலக சக்திகளின் கைப்பொம்மையாக மாறாது, தேசிய சிந்தனையின் அடிப்படையில் செயற்பட்டதால்தான் எமக்கு எதிராக அரச சார்பற்ற மற்றும் சில அரசியல் கட்சிகளுடன் இணைந்து சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது. எமது சொத்துகளுக்கு மட்டுமல்ல உயிர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதே அவர்களின் தேவைப்பாடாக இருந்தது. கோத்தாபய அதிகாரத்தை பெறுவதற்கு முன்னரே 'ஹிட்லர்' வருகிறார் எனக் கூறினர். இறுதியில் என்ன நடந்தது? அவர் ஹிட்லர்போல் செயற்படவில்லை. அதிகாரத்தை பெறுவதுபோல அதை கைவிடுவதற்குரிய அனுபவமும் எமது கட்சிக்கு உள்ளது - என்றார். (அ-எ-44)

## வடக்கில்...

கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் தொழிலாளர் தினக் கூட்டம் நடைபெற்றது. கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரசியல் பிரமுகர்கள், கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்தோர், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் தொழிலாளர் தினக் கூட்டம் நடத்தப்பட்டது. கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு கூட்டம் ஆரம்பமானது. அதில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் தொழிலாளர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முல்லைத்தீவில் தொழிலாளர் தினக் கூட்டமும், ஊர்திப் பவனியும் நடைபெற்றது. அதில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டனர்.

வவுனியாவில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டிலும், அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டிலும் தொழிலாளர் தினக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலும் தொழிலாளர் தினக் கூட்டம் நடத்தப்பட்டது. மாலை 5.30 மணியளவில் புதிய செம்மணி வீதி சந்தியிலிருந்து ஆரம்பமாகிய பேரணி கிட்டுப் பூங்காவை அடைந்து அங்கு கூட்டம் நடைபெற்றது. (அ-எ.110,20,113,19,125)

## சட்டங்களை...

மாணவர் இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1979ஆம் ஆண்டு தற்காலிகமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் மக்களை எந்தவகையிலும் பாதுகாக்கவில்லை. மாறாக மக்களை ஒடுக்குவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தால் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஜனநாயக விரோத அடக்குமுறைச் சட்டமாகவே பிரயோகிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-எ-இ)

## குடியேற்றங்களால்...

குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் திருகோணமலை இணைப்பாளர் சி.சிவசங்கரன் ஆகியோர் இணைந்து நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கன்னியாயில் தமிழர் காணிகளில் சட்டவிரோதமாக முஸ்லிம் குடியேற்றத்தை உருவாக்க முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கன்னியாய் வெந்நீருற்றுப் பிரதேசம் பௌத்த மரபுரிமை எனத் தொல்லியல் திணைக்களத்தால் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் தற்போது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹரூப்பின் பின்புலத்துடன் ஒரு தொகுதி முஸ்லிம் மக்களை தமிழ் மக்கள் வசிக்கும் கன்னியாய் கிராம அலுவலர் பிரிவில் வெந்நீரூற்றுச் சுற்றயலில் குடியேற்ற அவசர அவசரமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் வயது மூப்புக் காரணமாக விரைந்து செயற்பட முடியாதுள்ள நிலையில், அயற்பிரதேச தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் தீவிர கவனம் எடுக்கவேண்டும். கன்னியாய் வெந்நீருற்றுப் பிரதேசம் முழுமையாகத் தமிழர்களிடம் இருந்து கை நழுவிப்போகும் பாரதூர விடயத்தை புரிந்து கொண்டு அரச இயந்திரத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். இந்த விடயத்தில் சட்ட உதவிகளும் குறைவாக உள்ள நிலையில் மூத்த தமிழ் சட்டத்தரணிகளின் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ-எ-66)

## அல்லைப்பிட்டியில்...

மானிப்பாயைச் சேர்ந்த ர.திரியா (வயது-32), கோப்பாயைச் சேர்ந்த ந.நிலக்சிகா (வயது-26) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் மற்றையவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பெண்கள் இருவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது பின்னே வந்த கார் மோதி விபத்து நடந்துள்ளது. காரின் சாரதி காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இறப்பு விசாரணைகளை தீவக திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நாகராசா தியாகராசா மேற்கொண்டார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்பித்துச்...

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வலிக்கண்டிப் பகுதியில் நடந்துள்ளது.

கஞ்சா கடத்தப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய விசேட அதிரடிப் படையினர் அந்தப் பகுதியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். இரவு 11.30 மணியளவில் வீதியால் வந்த டிப்பர் வாகனம் ஒன்றை விசேட அதிரடிப் படையினர் மறித்துச் சோதனையிட முயன்றுள்ளனர். சிறப்பு அதிரடிப் படையினரின் சமிக்ஞையை மீறி டிப்பர் வாகனச்சாரதி தப்பிச்செல்ல முயன்றுள்ளார்.

சிறப்பு அதிரடிப் படையினரை மோதி விபத்தை ஏற்படுத்தும் விதமாக டிப்பர் வாகனம் செலுத்தப்பட்ட நிலையில், அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்ற சிறப்பு அதிரடிப் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து, தப்பித்துச் சென்ற டிப்பர் வாகனம் மீது சிறப்பு அதிரடிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். டிப்பர் வாகனத்தின் பின் சக்கரத்தில் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்து காற்றுப் போனது. உடனடியாகவே டிப்பர் வாகனம் சிறப்பு அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டது. டிப்பர் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

அந்த டிப்பரில் சட்டவிரோதமாக மணல் கடத்தப்படுவது விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனத்துடன், சந்தேகநபர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படும் நிலையில், அவர்களைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சிறப்பு அதிரடிப் படைச் சிப்பாய் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-எ-26)

## எரிவாயு...

ஜனாதிபதி அலுவலகப் பிரதானியும், தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எரிபொருள் விலைகள் குறைந்துள்ள நிலையில், அடுத்த சில நாள்களில் எரிவாயு சிலிண்டர் விலையும் குறையும்.

பணவீக்கம் 70 வீதத்தில் இருந்து கடந்த மாத இறுதியில் 50 வீதமாகக் குறைந்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்கு அதை ஒற்றை இலக்கமாக மாற்ற முயற்சிக்கின்றோம் - என்றார். (அ-எ-22)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A-9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து **700M** தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

(CS 24650)A-1

# காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

**பார்வையிடும் நேரம் :**

**காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

**தொடர்பு:-076 755 8606 077 638 5683**

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (02.04.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர்
## ஜெயபாலன் சிவபூபதி (லதா)

அவர்களின் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (03.05.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.** **கணவர்.**
**077 900 6931**

(CS 24695)A-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
07
04
1929



மறைவு
01
05
2023

## மயில்வாகனம் விசாலாட்சிஅம்மை

166, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் விசாலாட்சிஅம்மை நேற்று (01.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - தையல்அம்பாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தனநாயகம், கதிர்காமநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஷ்பகாந்தி, வசந்தகுமாரி ஆகியோரின் மாமியாரும், வினோதினி, தயாகரன், விக்கினேஸ்வரன், சுபாஜினி, மயூரன், மோகனா, விஜயகாந், சுமதி, ஜனனி, சுரேந்தன், லாவண்ஜா, மேனகப்பிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான குமாரசூரியர், பாலசுப்பிரமணியம், ஜெயதீஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகரெட்ணம், தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், லதுஷன், நிதுஷன், ஆர்யன், சர்வின், ஆருஷா, ஜெனிஷா, யதுஷாளினி, பவிஷ்னா, நிருத்பவன், கெய்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2023) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனத்திற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**11/8, பண்டாரிக்குள மேற்கு ஒழுங்கை,**
**நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 221 5749**

(CS 24694) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.